## Grade - Post Diploma தரம் - முது நிலை டிப்ளோமா

**Title - Miruthanga Kala Ratnam**

**பட்டம் - மிருதங்க கலாரத்தினம்**

Candidates applying for Post Diploma Grade should have completed the OFAAL Diploma Grade and have achieved the Kala Jothy Title. They should also have completed a Sub subject at Grade 4 minimum of the OFAAL Examination.

**முது நிலை டிப்ளோமா பரீட்சைக்கு தோன்றும் பரீட்சாத்திகள் OFAAL டிப்ளோமா தரத்தில் சித்தியெய்தி கலாஜோதி பட்டம் பெற்றிருப்பதுடன் துணைப் பாடமொன்றில் OFAAL பரீட்சையில் குறைந்தது தரம் 4 சித்தியடைந்திருத்தல் வேண்டும்.**

In addition to the syllabus for Grades 1 to Diploma, the following.

தரம் 1- டிப்ளோமா இற்கான விடயங்களுடன், பின்வருவனவும்.

**Practical and Oral Demonstration**

**செயல்முறை, வாய் முலம் சொல்லல்**

1. To be able to accompany Carnatic music concerts (Vocal and Intrumental).

   கர்நாடக இசைக்கச்சேரிக்கு பக்கவாத்தியம் வாசித்தல் (வாய்ப்பாடும் வாத்தியமும்)

2. Composing Mora and Korvai for a given Talam in 35 Talams.

   35 தாளங்களில் தரப்பட்ட ஒரு தாளத்திற்கு மோரா, கோர்வை அமைத்து வாசித்தல்

3. “Konnakkol” demonstration to any lesson given by the examiner.

   பரிட்சையாளர் கொடுக்கும் ஒரு பாடத்திற்கு “கொண்ணக்கோல்” செய்தல்.

**Written Report (அறிமுறை)**

Candidates must submit their dissertation together with the Application Form in preparation for the VIVA part of the examination, (please use bamini font for Tamil letter presentation.)
Once the written dissertation is approved the candidate is expected to bind the article in a presentable booklet form and submit three copies to the examination board.
The Post-Diploma candidate is expected to summarise and present to the board and audience the dissertation using PowerPoint slides emphasising the salient points of the dissertation subject. This will be an interactive question and answer session involving the examination panel and questions and the invited audience, duration 60 minutes.

பரீட்சார்த்திகள் விண்ணப்பப் படிவத்துடன் தாம் தெரிவு செய்த தலைப்பில் வாய் மொழி தேர்விற்கு எழுதிய கட்டுரையை சமர்ப்பிக்க வேண்டும். ( தயவு செய்து தமிழ் bamini கணணி எழுத்துருவை உபயோகிக்கவும்). எழுதிய கட்டுரை அங்கிகரிக்கப்பட்டபின், அதனை பரிட்சார்த்தி புத்தக வடிவில் அமைத்து மூன்று பிரதிகளை பரீட்சை நிர்வாகத்திற்கு அனுப்புதல் வேண்டும்

பரீட்சை தினத்தன்று தான் எழுதிய கட்டுரையை பரீட்சைக்குழுவும் பார்வையாளரும் உள்ள சபையில் Power point பாவித்து தொகுத்துரைக்க வேண்டும். ஆதன் பின்பு பரிட்சை குழுவினதும் பார்வையாளாகளினதும் கேள்விகளுக்கு விளக்கமளிக்கவேண்டும் இதன் கால அளவு 60 நிமிடங்களாகும்.

1. A comparative study of the evolution of Thani Aavarthanam in a Carnatic concert and analyse the role of Thani Aavarthanam in a concert, making reference to present and past Miruthanga Vidwans.

   தனி ஆவனத்தின் மறுமலர்ச்சி பற்றி ஆராய்ந்து கர்நாடக கச்சேரியில் அதன் பங்கை மறைந்த, தற்போதைய மிருதங்க வித்துவான்களை தொடர்பு படுத்தி ஆராய்க.

2. Detailed analysis of Miruthanga vidwans and their playing style (Bhaani).

   மிருதங்க வித்துவான்களையும் அவர்கள் வாசிக்கும் பாணியையும் விரிவாக ஆராய்க.

3. Provide a detailed commentary and critique of a given concert, focusing your analysis on Miruthanga Vidwan's performance. (Audio CD will be provided by OFAAL).

   ஒலி நாடாவில் தரப்பட்ட ஒரு கச்சேரியைப் பற்றி விரிவாக குறை, நிறை பற்றிய விமர்சனம். மிருதங்க வித்துவானின் வாசிப்பு பற்றிய விபரத்தில் கூடிய கவனம் செலுத்தல் வேண்டும்.

4. Analyse the role of Miruthangam and sub-accompanying instruments in a Tala-Vadya concert. Consideration should be given to the characteristics of the individual intruments and how they complement each other.

   வாத்திய கச்சேரி ஒன்றில் மிருதங்கத்தினதும் மற்றைய உப பக்கவாத்திய கருவிகளினதும் பங்கை ஆராய்க. ஒவ்வொரு தனி கருவிகளின் தன்மைகளையும் அவை எப்படி ஒன்றுடன் ஒன்று இணைகின்றன என்பதில் கவனம் செலுத்தல் வேண்டும்.

5. Impact of "FUSION"

   i.e. Carnatic and Hindustani or Carnatic and Western

   Discuss and analyse the key features of a successful "FUSION" piece.

   இசைக் கலப்பின் தாக்கம்.

   அதாவது கர்நாடக இசையும் இந்துஸ்தானி இசையும் அல்லது கர்நாடக இசையும் மேல்நாட்டு இசையும்.

   பிரபல்யமான இசைக்கலப்பொன்றின் சிறப்பு அம்சங்களை துருவி ஆராய்க.

## Specimen Questions

1. Which God first created the Miruthangam ?
எக் கடவுளினால் மிருதங்கம் உருவாக்கப்பட்டது?

2. What is the Miruthangam's wooden frame made of?
மிருதங்கத்தின் மர சட்டம் எதனால் செய்யப்பட்டது?

3. How many layers are on the right hand side of the Miruthangam? What are they made of?
மிருதங்கத்தின் வலது பக்க அடுக்குகள் எத்தனை? அவை எதனால் செய்யப்பட்டவை?

4. What is the black spot on the Valanthalai made of ? What is this black spot called?
மைய அடுக்கில் உள்ள கறுத்த பகுதி எதனால் செய்யப்பட்டது? அதன் பெயர் என்ன?

5. How do you tune a Miruthangam?
மிருதங்கத்திற்கு எப்படி சுருதி சேர்ப்பீர்?

6. What does the word "Sarvalagu" mean?
சர்வலகு என்ற சொல்லின் பொருள் என்ன?

7. What are the five Jaathis? ஐந்து ஜாதிகள் எவை?

8. Explain what the three Angams are?
மூன்று அங்கங்கள் எவை? அவற்றை விளக்குக.

9. Among the three Angams , which one varies?
மூன்று அங்கங்களில் மாறக்கூடிய அங்கம் யாது?

10. What is Aavarthanam? ஆவர்த்தனம் என்றால் என்ன?

11. Which Talam has all the three Angams?
மூன்று அங்கங்களும் சேர்ந்து வரும் தாளம் எது?

12. Name the 6 Angams and give the symbols and counts for each of them.

6 அங்கங்கள் எவை?
அவற்றின் அடையாளம், எண்ணிக்கைகளைத் தருக.

13. What does the term “Tala Prasthara” mean?
தாளப்பிரஸ்தரம் என்பதன் பொருள் என்ன?

14. Which of the 35 Talams has the least number of Atcharams?
35 தாளங்களில் மிகவும் குறைந்த அட்சரமுள்ள தாளம் எது?

15. Give another name for Adi Talam.
ஆதி தாளத்தின் மறு பெயர் என்ன?

16. Explain how 7 Talams were derived into 35 Talams, and 35 Talams derived into 175 Talams.
7 தாளங்கள் 35 தாளங்கங்களாகவும், 35 தாளங்கங்கள்175 தாளங்கங்களாகவும் மாறும் விதத்தை விளக்குக.

17. Explain Sruti, Naatham and Swaram.
ஸ்வரம், நாதம், சுருதி இவற்றிற்கு விளக்கம் தருக.

18. In Ragam, Thanam, Pallavi, what is the meaning of Pallavi?
ராகம், தானம், பல்லவியில் ‘பல்லவி’ என்பதற்கு பொருள் தருக.

19. Write brief notes about Jathi, Jaathi and Gathi.
ஜதி, ஜாதி, கதி என்பவை பற்றி சிறு குறிப்பு எழுதுக.

20. Name the Talams which have 8 Atcharams.
8அட்சரங்களை உள்ளடக்கிய தாளங்களின் பெயர்களைத் தருக.

21. Explain how you would play a Chathusra Jaathi Thirupudai Tala Korvai in Rupaka Talam.
சதுஸ்ர ஜாதி திருபுடை தாளக் கோர்வை ஒன்றை ரூபக தாளத்தில் எப்படி வாசிப்பீர் என்பதை விளக்குக.

22. Write the meaning and sign of the following.

பின்வருவனவற்றின் கருத்தையும் அடையாளத்தையும் எழுதுக.

a. Lagu - லகு.

b. Dhrutham - துருதம்.

c. Anudhrutham - அனுதுருதம்.

23. List 5 musical pieces which can be heard in a musical recital.

சங்கீதக் கச்சேரியில் வாசிக்கப்படும் 5 சங்கீத உருப்படிகளைத் தருக.

24. Write the Tala format of the following.

பின்வருவனவற்றின் தாள அங்கங்களை எழுதுக.

a. Chathusra Jaathi Dhruva Talam - சதுஸ்ர ஜாதி துருவ தாளம்.

b. Misra Jaathi Jhampa Talam - மிஸ்ர ஜாதி ஜம்பை தாளம்.

c. Sangeerna Jaathi Eka Talam - சங்கீர்ண ஜாதி ஏக தாளம்.

d. Thisra Jaathi Thirupudai Talam - திஸ்ர ஜாதி திருபுடை தாளம்.

25. How has the word Talam been derived?

தாளத்தின் உற்பத்தி பற்றி எழுதுக.

26. What is Thisram? திஸ்ரம் என்றால் என்ன?

27. Draw a diagram of the Miruthangam and label the different parts.

மிருதங்கத்தின் படம் ஒன்று வரைந்து பாகங்களைக் குறிப்பிட்டு அவற்றை விளக்குக.

28. Write down the number of counts for the following (while playing Thathinkinathom once).

பின்வரும் சந்தர்ப்பங்களில் ததிங்கிணதோம் ஒரு தடவை வாசிக்கப்படும் போது மாத்திரைகளின் எண்ணிக்கைகளை தருக.

a. Thisra Jaathi Thathinkinathom - திஸ்ர ஜாதி ததிங்கிணதோம்.

b. Chathusra Jaathi Thathinkinathom - சதுஸ்ர ஜாதி ததிங்கிணதோம்.

29. Explain with Tala notations the method of playing Kanda Jaathi Thathinkinathom in Adi Talam.

ஆதி தாளத்தில் கண்ட ஜாதித் ததிங்கிணத்தோம் வாசிக்கும் முறை பற்றி தாளக் குறியீடுகளுடன் விளங்கப்படுத்துக.

30. Songs played in Misra Chapu Talam can also be played in what other Talams?

மிஸ்ர சாபு தாளத்தில் வாசிக்கப்படும் பாடல்களை வேறு எந்தத் தாளங்களில் வாசிக்கலாம்?

31. When a song starts before Talam , what Eduppu is it?

தாளத்தின் முன்னர் பாட்டு தொடங்குவது எந்த எடுப்பு என்று அழைக்கப்படும்?

32. Explain in detail about "Thriangam".

திரியாங்கம் பற்றி விளக்கமாக எழுதுக.

33. Explain in detail how we have 35 different Talams with reference to Tala format (Tala Angangal).

35 தாளங்கள் உண்டான விதத்தை தாள அங்கங்களுடன் தொடர்புபடுத்தி விபரமாக எழுதுக.

34. List the order of pieces in a musical concert and when the Miruthangam Thani Avarthanam comes in.

சங்கீதக் கச்சேரியில் உருப்படிகளின் ஒழுங்கை வரிசைப்படுத்தி அதில் மிருதங்க தனி ஆவர்த்தனம் எவ்விடத்தில் வருகின்றது என்பதை தருக.

FINE ARTS EXAMINATION
OFAAL

## Theoritical Notes - குறிப்புகள்

| Sadjama Sruthi | | ⇨ Panjama Sruthi | |
|---|---|---|---|
| Carnatic Notation (Kattai) | Western Notation | Carnatic Notation (Kattai) | Western Notation |
| ½ or 7 | B | 4½ | $F^{\#}$ |
| 1 or 8 | C | 5 | G |
| 1½ | $C^{\#}$ | 5½ | $G^{\#}$ |
| 2 | D | 6 | A |
| 2½ | $D^{\#}$ | 6½ | $A^{\#}$ |
| 3 | E | ½ | B |
| 4 | F | 1 | C |
| 4½ | $F^{\#}$ | 1½ | $C^{\#}$ |
| 5 | G | 2 | D |
| 5½ | $G^{\#}$ | 2½ | $D^{\#}$ |
| 6 | A | 3 | E |
| 6½ | $A^{\#}$ | 4 | F |

**Talam**

Talam is a cyclic measure of a time unit which simultaneously maintains the rhythm. Vocal, instrumental and Dance Music depend on Talam. The Tala system is one of the most diffcult and complicated branches of South Indian Carnatic Music. In the word Talam, **Ta** represents Lord Shiva and **la** represents his consort Parvathi. Therefore, it is believed that Tala is the union of Shiva and Parvathi.

**Angams**

Angam is the name given to the divisions or parts of a Talam. They are groups of beats which are shown by hand gestures such as claps, finger counts, or turns of the palm. The angams making up a Talam may be of different lengths. There are 3 main Angams in common usage - Lagu, Dhrutham and Anudhrutham. These Angams can be found in the 35 Talams. Although other Angams exist, they are not found in common usage today. The following 6 Angams are collectively called Shadangams - Anudhrutham, Dhrutham, Lagu, Guru, Plutham and Kakapatham. These are used in "Thiruppugal", Dance Music and

complicated Pallavis. In addition to these 6 Angams there are a further 10 Angams collectively called as Shodasangam. These are given below.

**Thriangams (3 Angams)**

| No | Name of the Angam | Symbol | No of Beats (Atcharams) | Kriyas |
|---|---|---|---|---|
| 1 | Anudhrutham | U | 1 | One clap |
| 2 | Dhrutham | O | 2 | One clap and a turn |
| 3 | Lagu | I | 3 or 4 or 5 or 7 or 9 (depends on Jaathi) | One clap and number of finger counts |

**Shadangam (6 Angams)**

| No | Name of the Angam | Symbol | No of Beats (Atcharams) | Kriyas |
|---|---|---|---|---|
| 1 | Anudhrutham | U | 1 | One beat |
| 2 | Dhrutham | O | 2 | One clap and a turn |
| 3 | Lagu | I | 4 | One clap and 3 finger counts |
| 4 | Guru | 8 | 8 | A clap with 3 counts and the palm is brought down for the remaining 4 counts |
| 5 | Plutham | I<br>8 | 12 | 12 counts are counted in a cyclic way-clock-wise starting from the bottom |
| 6 | Kakapatham | + | 16 | Sarpini, Krisha, Pathaka and Pathitha functions to be carried out. |

FINE ARTS EXAMIN
OFAAL

## Shodasangam (16 Angams)

| No | Name of the Angam | Symbol | No of Beats (Atcharams) |
|---|---|---|---|
| 1 | Anudhrutham | U | 1 |
| 2 | Dhrutham | O | 2 |
| 3 | Dhrutha Viraamam | U<br>O | 3 |
| 4 | Lagu | I | 4 |
| 5 | Lagu Viraamam | U<br>I | 5 |
| 6 | Lagu Dhrutham | O<br>I | 6 |
| 7 | Lagu Dhrutha Viraamam | U<br>O<br>I | 7 |
| 8 | Guru | 8 | 8 |
| 9 | Guru Viraamam | U<br>8 | 9 |
| 10 | Guru Dhrutham | O<br>8 | 10 |
| 11 | Guru Dhrutha Viraamam | U<br>O<br>8 | 11 |
| 12 | Plutham | I<br>8 | 12 |
| 13 | Plutha Viraamam | U<br>I<br>8 | 13 |
| 14 | Plutha Dhrutham | O<br>I<br>8 | 14 |
| 15 | Plutha Dhrutha Viraamam | U<br>O<br>I<br>8 | 15 |
| 16 | Kakapatham | + | 16 |

## Five Jaathis of Lagu

| No | Name of the Jaathi | Symbol of Lagu | No of Beats (Atcharams) | Kriyas |
|---|---|---|---|---|
| 1 | Thisra Jaathi | $I_3$ | 3 | A clap and 2 finger counts |
| 2 | Chathusra Jaathi | $I_4$ | 4 | A clap and 3 finger counts |
| 3 | Kanda Jaathi | $I_5$ | 5 | A clap and 4 finger counts |
| 4 | Misra Jaathi | $I_7$ | 7 | A clap and 6 finger counts |
| 5 | Sangeerna Jaathi | $I_9$ | 9 | A clap and 8 finger counts |

## Saptha (7) Talams

| No | Name of the Talam | Symbol | Symbol in words |
|---|---|---|---|
| 1 | Dhruva Talam | I O I I | Lagu Dhrutham Lagu Lagu |
| 2 | Matya Talam | I O I | Lagu Dhrutham Lagu |
| 3 | Rupaka Talam | O I | Dhrutham Lagu |
| 4 | Jhampa Talam | I U O | Lagu Anudhrutham Dhrutham |
| 5 | Thirupudai Talam | I O O | Lagu Dhrutham Dhrutham |
| 6 | Atta Talam | I I O O | Lagu Lagu Dhrutham Dhrutham |
| 7 | Eka Talam | I | Lagu |

FINE ARTS EXAMINATION
OFAAL

**Seven Commonly used Talams**

| No | Name of the Talam | Symbol | Total Number of Atcharams |
|---|---|---|---|
| 1 | Chathusra Jaathi Dhruva Talam | $I_4\ O_2\ I_4\ I_4$ | 14 |
| 2 | Chathusra Jaathi Matya Talam | $I_4\ O_2\ I_4$ | 10 |
| 3 | Chathusra Jaathi Rupaka Talam | $O_2\ I_4$ | 6 |
| 4 | Misra Jaathi Jhampa Talam | $I_7\ U_1\ O_2$ | 10 |
| 5 | Thisra Jaathi Thirupudai Talam | $I_3\ O_2\ O_2$ | 7 |
| 6 | Kanda Jaathi Atta Talam | $I_5\ I_5\ O_2\ O_2$ | 14 |
| 7 | Chathusra Jaathi Eka Talam | $I_4$ | 4 |

FINE ARTS EXAMINATION
OFAAL

## 35 Talams

The Saptha (7) Talams differ in their Tala duration and formation by the variations of their angams. Only three angams are used.

The Saptha (7) Talams all have at least 1 Lagu. As we have mentioned before, there are 5 Jaathis of Lagu. Therefore each Saptha (7) Talams has 5 Jaathis, forming a total of (7×5) 35 Talam.

| | | Panja (5) Jaathi | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | Thisram | Chathusram | Kandam | Misram | Sangeernam |
| Saptha (7) Talam | Dhruva Talam | $I_3\ O_2\ I_3\ I_3$<br>11 | $I_4\ O_2\ I_4\ I_4$<br>14 | $I_5\ O_2\ I_5\ I_5$<br>17 | $I_7\ O_2\ I_7\ I_7$<br>23 | $I_9\ O_2\ I_9\ I_9$<br>29 |
| | Matya Talam | $I_3\ O_2\ I_3$<br>8 | $I_4\ O_2\ I_4$<br>10 | $I_5\ O_2\ I_5$<br>12 | $I_7\ O_2\ I_7$<br>16 | $I_9\ O_2\ I_9$<br>20 |
| | Rupaka Talam | $O_2\ I_3$<br>5 | $O_2\ I_4$<br>6 | $O_2\ I_5$<br>7 | $O_2\ I_7$<br>9 | $O_2\ I_9$<br>11 |
| | Jhampa Talam | $I_3\ U_1\ O_2$<br>6 | $I_4\ U_1\ O_2$<br>7 | $I_5\ U_1\ O_2$<br>8 | $I_7\ U_1\ O_2$<br>10 | $I_9\ U_1\ O_2$<br>12 |
| | Thirupudai Talam | $I_3\ O_2\ O_2$<br>7 | $I_4\ O_2\ O_2$<br>8 | $I_5\ O_2\ O_2$<br>9 | $I_7\ O_2\ O_2$<br>11 | $I_9\ O_2\ O_2$<br>13 |
| | Atta Talam | $I_3\ I_3\ O_2\ O_2$<br>10 | $I_4\ I_4\ O_2\ O_2$<br>12 | $I_5\ I_5\ O_2\ O_2$<br>14 | $I_7\ I_7\ O_2\ O_2$<br>18 | $I_9\ I_9\ O_2\ O_2$<br>22 |
| | Eka Talam | $I_3$<br>3 | $I_4$<br>4 | $I_5$<br>5 | $I_7$<br>7 | $I_9$<br>9 |

**Chaapu Talams**

The Chaapu Talams are one of the oldest time measures used in Indian Music. There are many folk melodies, Bhajans and devotional songs set in Chaapu Talams. It is a complicated time measure and is counted with two unequal beats.

| Name of the Talam | | Key Word | Kriyas |
|---|---|---|---|
| Thisra Chaapu | 1+2 = 3 | Tha = Ki Da | First beat has 1 unit and the second has 2 |
| Kanda Chaapu | 2+3 = 5 | Tha Ka = Tha Ki Da | First beat has a duration of 2 units and the second has 3 |
| Misra Chaapu | 3+4 = 7 | Tha Ki Da = Tha Ka Thi Mi | First beat has a duration of 3 units and the second has 4 |
| Sangeerna Chaapu | 2+2+2+3 = 9 | Tha Ka Thi Mi Tha Ka = Tha Ki Da | First beat has a duration of 6 units and the second has 3 |

Misra Chaapu and Kanda Chaapu are very common in Music. Many Krithis have been composed in these Talams. Some Krithis can be found in Thisra Chaapu, but Sangeerna Chaapu is only found in Thiruppugal and Pallavis.

FINE ARTS EXAMINATION
OFAAL

# Eminent Percussionists பிரபல வித்துவான்கள்

**Palani Subramaniapillai**

Sri Palani Subramaniapillai was born into a family whose involvement in music went back several generations. He was born in 1909 as the second son of Palani Muthiahpillai. He was keen, as a child, to learn music. He first learnt to play the Miruthangam and Ganjira from his father. His stage performances started at a young age. A major advantage for this great Miruthangist was his training in Carnatic vocal - this enhanced his knowledge of music.

Unusually, he played Miruthangam with his left hand. Due to this, during his performances on stage, the audience were unable to see his Karanai - it was the tradition for the Miruthangist to sit on the right hand side of the stage. In 1936, he caused a revolution for left handed Miruthangists - he sat on the left hand side of the stage, enabling the audience to finally see the Karanai.

He played Miruthangam for Sembai Vaithiyanatha Bahawathar on several occasions. Sometimes, there would be the astounding opportunity to see Palakadu Sri Mani Iyer playing the Miruthangam along with Palani Subramaniapillai on the Ganjira. His intricate style of playing not only appealed to the Carnatic world but also to many other music lovers.

A few of the many eminent Carnatic musicians he accompanied are: Sithur Subramaniapillai, Madurai Mani Iyer , Ariyakudi G N B Ramanujanka Iyer and Ayathur Brothers. A fond nickname of his was "Palani Suppudu". Once, when he was playing in a musical stage in Bombay, the singer was reluctant to allow him to play a Thani Aavarthanam. Eventually, the singer only gave him three minutes to play his Thani Aavarthanam. Though Suppudu was only disappointed with this incident, music lovers and, in fact, Sembai Vaidyanatha Bagawathar were enraged and there were many protests.

Sembai arranged a musical recital at The Bombay Saba, with Suppudu on the Miruthanagam – the Kutcheri was held for five hours and gave Suppudu five times, at frequent intervals, to

play the Thani Aavarthanam. He entertained the audience in Bombay and returned to Madras with great laurels. Suppudu had great respect for Sembai. He had great faith in Guruvayurappan. Doctors failed to cure him when he once had chest pain, so Sembai advised him to pray Guruvayurappan to cure his illness. Suppudu made a vow at the Guruvayurappan temple that he would play in front of Guruvayurappan as soon as he recovered from the illness. Within minutes of his vow, he was cured and in the same evening he fulfilled his vow. Palani Subramaniapillai who had the great reputation of producing many Miruthangam and Ganjira artists, died at the age of fifty three on 17.05.1962.

**பழனி சுப்பிரமணியபிள்ளை.**

திரு பழனி சுப்பிரமணியபிள்ளை அவர்கள் இசைலயஞான பரம்பரையிற் பிறந்தவர். இவர் 1909-ம் ஆண்டு பழனி முத்தையாபிள்ளையின் இரண்டாவது புத்திரராகப் பிறந்தார். இவர் பிறக்கும் போதே இசையார்வத்துடன் பிறந்தவர் என்றே கூறலாம். சிறு வயதிலேயே மேடைக்கு வந்தார். இதுமட்டுமல்ல சங்கீதத்தையும் (வாய்ப்பாட்டு) இலட்சிய லட்சணத்துடன் இங்கிதமாகப் பாடும் திறமை கொண்டவர். இவருடைய வாத்தியத்தினைப் பரிமளிக்கச் செய்தது இவரின் பாடும் திறன் என்றே கூறலாம்.

இவர் மிருதங்கத்தில் இடது கைப்பழக்கமுடையவர். இதன் காரணத்தால் இவர் பாடகரின் இடது புறமாக இருந்து வாசிப்பார். இவர்தான் மிருதங்கத்தின் லயந்தரையானது மேடையிலே இரசிகர்களின் பார்வைக்கு இருக்கவேண்டும் என்பதையும், அதற்கேற்ற முறையில் மிருதங்கக் கலைஞர்கள் வலமாகவும் இடமாகவும் உட்கார வேண்டும் என்பதையும் 1936-ம் ஆண்டு செம்பை வைத்தியநாத பாகவதர் கச்சேரியில் நிலை நாட்டியவர். இப்பெருமை பழனி சுப்பிரமணியபிள்ளை அவர்களுக்கே உரியது. இதன் காரணமாகவே கச்சேரியில் இடதுகையினால் வலந்தரையில் வாசிக்கும் மிருதங்கம் பாடகருக்கு இடதுபக்கம் உட்காருவதும் வழக்கத்தில் வந்துள்ளது.

இவர் செம்பை வைத்தியநாதபாகவதருக்கு அனேக கச்சேரிகளில் மிருதங்கம் வாசித்துள்ளார். சிலவேளைகளில் செம்பை அவர்களுக்கு பாலக்காடு சிறி மணிஐயர் மிருதங்கமும், பழனி சுப்பிரமணியபிள்ளை கஞ்சிராவும் வாசித்துள்ளார்கள். இவரின் வாசிப்பானது நிரம்பிய நாதசுரமானது.

இவர் சித்துூர் சுப்பிரமணியபிள்ளை, மதுரை மணிஐயர், ஜி .என். பி. அரியக்குடி ராமாநுஜ ஐயங்கார், ஆயத்தார் சகோதரர் ஆகியோர்களுக்கும் அநேக கச்சேரிகளில் மிருதங்கம்,

கஞ்சிரா என்பன வாசித்துள்ளார். இவரை ‘‘பழனி சுப்புடு’’ என்றே யாவரும் அழைப்பார்கள். ஒரு முறை இவர் பம்பாய் சபாவில் முதல் முதலாக கச்சேரிக்கு வாசிக்கச் சென்றபோது கச்சேரியில் பாடகர் தனி வாசிக்க இடம் கொடுக்கவில்லை. இருந்தும் பழனி சுப்ரமணியபிள்ளை தாமாகவே தனி வாசிக்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியும், பாடகர் 3 நிமிட நேரமே கொடுத்தார். இது சுப்புடுவிற்கு பெரிய மன வேதனையை உண்டு பண்ணியது. இச்சம்பவத்தை அறிந்த செம்பை அவர்கள், சுப்புடு அவர்களை தனது அடுத்த பம்பாய் சபாவில் கச்சேரிக்கு ஏற்பாடு செய்து அழைத்து சென்றார். அன்று 5 மணி நேரம் கச்சேரி நடைபெற்றது. அக்கச்சேரியில் ஐந்து இடங்களில்

சுப்புடுவின் தனி வாசிப்புக்கு இடம் கொடுத்தார். சுப்புடுவும் தனியில் ஜமாய்த்தார். பம்பாய் இரசிகர்களின் பாராட்டைப்பெற்று புகழுடன் சென்னை திரும்பினார். சுப்புடு அவர்களுக்கு செம்பை வைத்தியநாதரிடம் மிகுந்த பக்தி உண்டு. அதே போல குருவாய்யூரயப்பனிலும் மிகுந்த நம்பிக்கை இருந்தது. சுப்புடுவிற்கு ஒரு முறை மார்புவலி ஏறிபட்டபோது வைத்தியர்கள் முயற்சி பயனளிக்கவில்லை. எனவே செம்பை அவர்கள் நோய் தீரும்படியாக திருவாயூரப்பனிடம் பிரார்த்னை செய்யும்படி சுப்புடுவிடம் கூறினார். சுப்புடுவும் தனது நோய் தீர்ந்ததும் குருவாய்யூரயப்பன் சந்நிதியில் கச்சேரி வாசிப்பதாக பிராத்தித்தார். சில நிமிடங்களில் நோய்யும் தீர்ந்தது. அன்று மாலையே கச்சேரியை வாசித்து பிராத்தனையையும் முடித்தார். அநேக மிருதங்க, கஞ்சிரா கலைஞர்களை உருவாக்கிய பெருமையுடன் தனது 53 வது வயதில் 17-05-62 ல் கலையுலகினை விட்டு விண்ணுலகினை எய்தினார்.

**Inuvil K Sangarasivam**

Miruthanga Vidwan Sangarasivam, son of Inuvil Kandiah was born on 13.06.1939. He joined as an assistant teacher in a government school in 1960. He started to learn Miruthangam under the late Ambalavaanar. He took special training under prosperous Miruthanga Vidwans such as P.Sinnarajah, A.S.Ramanathan and M.N. Selvadurai. Besides this, he learnt Carnatic vocal from Sangeetha Poosanam S. Balasingam.

In 1972 he celebrated his Miruthanga Arangetam. In 1976 he passed the Teachers Certificate Examination held by North Ceylon Musical Examination Board. He continued to teach Miruthangam to students and also worked as a teacher in a school. He had his own way in training students. He respected all artists, even those younger than him. He had the habit of discussing his problems with other artists, and was capable of understanding others' problems. His style of accompaniment complimented and supported the Vocalist/ Intrumentalist he was performing with.

His experiences in music were very helpful for the examination of Miruthangam for the North Ceylon Musical Board. He worked as an examiner in practicals, setting question papers and was also a decision making committee member from 1977 to 1988.

In 1979, he made a special contribution to music by publishing a book called "Concise understanding in Miruthangam". Very few books were published for Miruthangam in India or Sri Lanka. In this instance his book should be highly valued by all.

His sudden illness took him away from the musical world at midnight in 17.05.1988 as a sudden death.

**இணுவில் க. சங்கரசிவம்**

மிருதங்க வித்துவான் சங்கரசிவம் இவர்கள் இசைக்கலைஞர்கள் பொதிந்து வாழும் இணுவையூரில் கந்தையா என்பவரின் புதல்வராக 13-06-1939ல் பிறந்தார். இவர் தனது ஆரம்பக்கல்வி தொடங்கி க.பொ.த. வரையும் இணுவில் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் 1944-ம் ஆண்டு தொடங்கி 1956 வரை பயின்றார். இதன் பயனாக இவர் ஓர் உதவி

ஆசிரியராக 1960-ம் ஆண்டு அரசாங்கப் பாடசாலையில் நியமனம் பெற்றுக் கடமை புரிந்தார். இக்காலத்திலேயே மிருதங்கம் பயிலவும் ஆரம்மித்தார். இவருடைய ஆரம்ப குரு காலஞ்சென்ற மிருதங்க வித்துவான் திரு.அம்பலவாணர் ஆவார். மேலும் இவர் பிரத்தியேகமாக மிருதங்க வித்துவான்களான ப.சின்னராசா, A.S. ராமநாதன், M.N. செல்லத்துரை ஆகியோர்களிடமும் விசேடமாக பயின்றார். இது மட்டுமின்றி வாய்பாட்டு இசையினையும் சங்கீதபூஷணம் S.பாலசிங்கம் அவர்களிடம் பயின்றார்.

இவருடைய மிருதங்க அரங்கேற்றம் 1972-ம் ஆண்டு நடைபெற்றது. இவர் இக்காலங்களிலேயே வடஇலங்கைச் சங்கீதசபைப் பரீட்சைகளுக்கும் தோற்றி 1976-ம் ஆண்டு மிருதங்க ஆசிரியர் தராதரம் பெற்றார். தொடர்ந்தும் மிருதங்கக் கலையில் சிரத்தையுடன் மாணவர்களைத் தயார் செய்யும் ஆசிரியராகவும், பாடசாலையில் ஆசிரியர் தொழிலையும் புரிந்து வந்தார். மாணவர்களைத் தயார் செய்வதில் தனக்கென ஒரு முறையை அமைத்துக் கொண்டவர். அத்துடன் ஏனைய மிருதங்கக் கலைஞர்களை வயதிற் சிறியோராயிருப்பினும் மதிக்கும் தன்மையுள்ளவர். அத்துடன் தனக்கு இக் கலையில் உள்ள சந்தேகங்களையும் ஏனையவர்களுடன் விளங்கிப் புரிந்து கொள்ளும் பண்புடையவர்.

இவருடைய மிருதங்க வாசிப்பும் பாடகர்களுக்கோ, வாத்தியக் கலைஞர்களுக்கோ இடையூறு இன்றியதாக இருக்கும். இவர் மற்றும் கலைஞர்களுடன் பழகும் விதமும் மிகுதியான பண்புடையது. இவரின் கலைச்சேவை பெரும்பாலும் வட இலங்கை சங்கீத சபையின் மிருதங்க பரீட்சைக்கு மிகுதியாகப் பயன்பட்டது. 1977 தொடக்கம் 1988 வரை செயன்முறைப் பரீட்சகராகவும், வினாப்பத்திரம் தயாரிப்பாளராகவும், மீளாய்வுக் குழுவினராகவும் பங்கு கொண்டவர்.

இவரின் கலைத்தொண்டில் விசேடமானது 1979-ம் ஆண்டு மிருதங்கச் சுருக்க விளக்கம் என்னும் நூலை வெளியிட்டமையாகும். மிருதங்க சங்கீதத்திற்கான நூல்கள் இந்தியாவிலும் சரி இலங்கையிலும் சரி வெளியிடப்பட்டது குறைவு. இந்நிலையில் இவரது மிருதங்கச் சுருக்க விளக்கம் வெளியிடப்பட்டது எல்லோராலும் பாராட்டப்பட வேண்டியதாகும்.

இவருடைய கலைச்சேவை வாழ்க்கையானது அதிக காலம் நீடிக்கவில்லை. திடிரென இவருக்கு ஏற்பட்ட ஜுரம் இவரை இசையுலகிலிருந்து 17-05-1988 அன்று நள்ளிரவு நிலையுலகிற்கு அனுப்பிவிட்டது.

**Layagnana Kupera Poopathy Jaffna Thachanamoorthy.**

Sri Thachanamoorthy was born in Inuvil, Jaffna on 26.08.1933 as the son of the famous Thavil Vidwan Visuvalingam Ratna. His parents named him first as Gnanapandithan. Later, for religious reasons, they called him Thchanamoorthy. It was this name that brought glory in his professional field as a Thavil Vidwan.

At the age of six, he learnt the basics of Thavil from his father. Later, he learnt more advanced and complex lesson on Thavil from Jaffna Vannai Kamadchi Sundrem. His brothers, Ruthrapathy and Kothandapani, played Nathaswaram. He had the stunning capability of being able to capture the audience's attention. Soon after, he learnt to play superior lessons from the Indian Thavil artiste Nachiar Kovil Ragavapillai. He won his fame by playing Thavil for the famous Nathaswaram artist Karukuruchi P Arunachalam, Sheik Sinnamoulana, Namakiripeddai Krishnan and T N Rajaratnampillai and through this won numerous gold medals.

On several occasions, he played Thavil along with Needamangalam Shanmugavadivel, both synchronised so well that it was imposible to spot a difference in playing. He married Manonmani in 1959. His elder son is now a famous Thavil player.

Many people used to visit all the places where Thachanamoorthy played Thavil. In India, people would usually take a break when the Thavil artistes played their Thani Aavarthanam. However, Thachanamoorthy's playing was so unique and captivating, the audience would always stay to watch it.

In 1969, he was praised by the great musical critic Suppudu in Madras Krishna Saba while he played Thavil for Sinna Moulana. He won his Gold Tower in India. He was known as "Everest" for the fact that he had no limits, his talents went sky high and also as "Rocket" for the speed he used to play at.

He spent the last stages of his life dedicated to music in India. He passed away on 13.05.1975 in Jaffna.

**‘லயஞானகுபேரபூபதி’ யாழ்ப்பாணம் தட்சணாமூர்த்தி’**

திரு தட்சணாமூர்த்தி அவர்கள். ஈழநாட்டின் யாழ்ப்பாணத்து இணுவில் என்னும் ஊரிலே பிரபல தவில் வித்துவான் விஸ்வலிங்கம் இரத்தினம் தம்பதிகளுக்கு புத்திரராக 26-08-1933ல் பிறந்தார். இவருக்கு முதலில் இவரின் பெற்றார் ஞானபண்டிதன் என்ற பெயரை வைத்தார்கள். பின்னர் இவரை தட்சணாமூர்த்தி என்று அழைக்க ஆரம்பித்தனர். இப்பெயர்தான் இவரைக் கலைவாழ்வில் நன்கு பிரதிபலிக்கச் செய்தது.

இவர் தனது ஆறாவது வயதில் தந்தையாரிடம் தவில் பயிற்சியை ஆரம்பித்தும் யாழ்ப்பாணத்து வண்ணை காமாட்சி சுந்தரம் என்பவரிடம் செவ்வனே நுணுக்கமாகவும் பயின்று வாசித்து வரலானார். இவருடன் சகோதரர்களான உருத்திராபதி, கோதண்டபாணி ஆகியோர் நாதஸ்வரம் வாசித்து வந்தார்கள். சிறுவயதிலேயே இவரது தவில் வாசிப்பு யாவரும் பிரமிக்கும் படியானதாகவும் நாதசுகமுள்ளதாகவும், லயவேலைப்பாடுகள் நிறைந்ததாகவும் வளர்ந்து வந்தது. இதுமட்டுமின்றி இந்தியப் பெருங்கலைஞரான நாச்சியார்கோவில் ராகவப்பிள்ளையிடம் மேலும் லயசம்பந்தமான நுணக்கங்களைப் பயின்று அவருடனும் சேர்ந்து தவில் வாசிக்கும் பேற்றைப் பெற்றார். தொடர்ந்து இந்திய நாதஸ்வர வித்துவான்களாக காரைக்குறிச்சி அருணாசலம், ஷேக் சின்னமௌலானா, நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன், T.N.ராஜரத்தினம்பிள்ளை போன்றவர்களுக்கு அனேக கச்சேரிகள் வாசித்து பாராட்டுகளையும், தங்கப்பதக்கங்களையும் பெற்றார்.

இந்தியாவில் அநேக கச்சேரிகளில் நீடாமங்களம் சண்முகவடிவேல் அவர்களுடனும் சேர்ந்து தவில் வாசித்து இரு தவில்களும் வித்தியாசம் தெரிந்துகொள்ள முடியாத அளவிற்கு ஒரே தவில் வாசிப்பது போன்று வாசித்துள்ளார்கள்.
இந்த நிகழ்ச்சி ஒலிப்பதிவுகள் சில இன்றும் உள்ளன. இவருடைய திருமணம் 1957ம் ஆண்டு நடைபெற்றது. இவருடைய மனைவியார் மனோன்மணி என்பவராவர். இவருக்கு பிள்ளைகள் உண்டு. அதில் மூத்த புதல்வர் இவர் வழியிலேயே தவில் கலையில் ஈடுபாடு கொண்டு பயின்று இன்றும் தவில் வாசித்து வருகின்றார். இவ்வகையாகப் பிரபல்யம் வாய்ந்த தட்சணாமூர்த்தி அவர்களின் தவில் தனிவினிக்கையைக் கேட்பதற்காக என்றே அநேக ரசிகர்கள் எங்கு தட்சணாமூர்த்தி அவர்களுடைய நிகழ்ச்சி நடைபெறுகிறதோ அங்கெல்லாம் சென்று வருவர்.

இந்தியாவில் தவில் தனிவினிக்கை நேரங்களில்தான் சங்கீத ரசிகர் கூட்டம் வெளியே ஓய்வெடுப்பது வழக்கமாயிருந்தது. ஆனால் தட்சணாமூர்த்தி அவர்களின் வாசிப்புச் சிறப்பால் ரசிகர் கூட்டம் கண்டிப்பாகத் தனிவினிக்கை கேட்கவேண்டும் என்ற நிலைக்கு மாறி வந்துள்ளது. இது அவருடைய நாதப்பிரம்மத்தின் சக்தியேயாகும்.

மேலும் 1969-ம் ஆண்டு சென்னை கிருஷ்ணகான சபாவில் நடைபெற்ற சின்னமௌலான அவர்கள் கச்சேரியில் தவில் வாசித்து இந்திய சங்கீத விமர்சகரான சுப்புடு அவர்களின் பாராட்டைப் பெற்றார். இவருக்கு சென்னையில் தங்கக்கோபுரம் பரிசாகக் கிடைத்தது. அத்துடன் இவரின் தவில் வாசிப்பினை எவறெஸ்ற், றொக்கட் எனவும் பாராட்டியுள்ளனர்.

இவர் தனது வாழ்நாட்களில் பின்பகுதியை இந்தியாவிலேயே செலவிட்டும், கலைத் தொண்டு ஆற்றியும் இலங்கை வந்து 13-05-1975 அன்று தனது கலையுலக வாழ்வை நீத்தார். எனினும் இவரது தவில் வாசிப்பின் பெருமையினால் யாழ்ப்பாணம் இந்தியாவில் இன்றும் பெருமை தேடிக்கொண்டே இருக்கிறது என்பது உண்மை.

**Palakadu Sri . T. S. Mani Iyer**

Mani Iyer showed a great deal of proficiency from his young age, and was considered a child prodigy. He was the son of the famous vocalist Palakadu Sri T.S. Sesha Bagavathar. He hails from a musical family. He had a sister and brother. His education was disrupted for the Art.

He started his Miruthangam training under Sathapuram Subbiah. By accompanying his vocalist father , he got the training to play for songs. He learnt the intricacies and new techniques from Aalapulai Sri Viswanatha Iyer and Tanjore Sri Vaidyanatha Iyer and by practice he developed his Art.

From the age of eight he started performing on stage for his father's story telling ("Hari Katha") and Sembai Vaithyanatha Bagawathar's recitals. He was also appointed court Musician by the Trivandram Palace,

Sembai Vaithyanatha Bagawathar took Mani Iyer to Madras to play for his recitals and very soon his fame spread all over and he was offered many opportunities. His playing had perfection in tonal clarity, command over Layam and rhythmic precision.

He accompanied several famous artists such as Arikudi, Chittoor Subramiapillai, G. N. B. , Tiger Varatha Charya, Maharajapuram Viswanatha Iyer and D.K.Pattammal.

In 1940 , the Thiruvangur palace conferred the title "Nathamani" on Mani Iyer. He also demonstrated the greatness of the Miruthangam to Western Audience at the Edinburgh Cultural Festival in America. In 1965 he received the Indian Presidents Award.

He is considered the head of the Miruthangam Artists of Tamil Nadu and an incarnation of Nandi Devar. The well respected musician Mani Iyer passed away in 1982.

**பாலக்காடு ' T.S. மணி ஐயர் '**

“விளையும் பயிரை முளையில் தெரியும்” என்ற வாக்கியத்திற்கு இணங்க மணி ஐயர் அவர்கள் சிறு பிராயத்திலேயே நிறைந்த வித்துவத்தன்மையோடு பிரபல்யமானார். இவர் பிரபல வாய்ப்பாட்டு வித்துவான் பாலக்காடு ஸ்ரீ.ரி. எஸ். சேஷபாகவதர் அவர்களின் புதல்வராவார். இவருக்'கு ஒரு சகோதரியும், ஒரு சகோதரரும் உள்ளனர். இவர்கள் குடும்பமே சங்கீத குடும்பமாகும். இவரின் கலையார்வமே இவரது பொதுக்கல்வி தடைப்படக் காரணமாயிருந்தது.

சாத்தபுரம் சுப்பையரிடம் மணி அவர்கள் மிருதங்க கலையை பக்தியுடன் பயில ஆரம்பித்தார். பாடகரான தகப்பனாரின் கச்சேரிகளுக்கு மணி ஐயர் பக்கவாத்தியம் வாசித்து , பாட்டுக்கு வாசிக்கும் பயிற்சியைப் பெற்றுக் கொண்டார். ஆலப்புழை ஸ்ரீ.விஸ்வநாத ஐயரிடமும், தஞ்சை ஸ்ரீ.வைத்தியநாதையரிடமும் பல நுணுக்கங்களையும், அரிய புது விடயங்களையும் கேட்டு அறிந்து, சாதகம் செய்து மென்மேலும் தன் வித்தையினை விருத்தி செய்து வந்தார்.

இவர் தனது எட்டாவது வயதிலேயே மேடையேறி தனது தந்தை சேஷையரின் பாட்டிற்கும், சிவராமகிருஷ்ண பாகவதரின் கதைகளுக்கும், செம்பை வைத்தியநாத பாகவதரின் கச்சேரிகளுக்கும் வாசித்து வரலானார். இதைவிட இவர் திருவனந்தபுர சமஸ்தான வித்துவானாகவும் நியமிக்கப்பட்டார். செம்பை வைத்தியநாத பாகவதர் மணியை சென்னைக்கு அழைத்துச் சென்று தனது கச்சேரிகளுக்கு வாசிக்க வைத்தார். இவரது வாசிப்பு சென்னை முழுவதும் பரவி, நிறைய கச்சேரிகளும், புகழும் இவருக்கு கிடைத்தது. இவரது மிருதங்க வாசிப்பில் நாதசுரமும், லயநிர்ணயமும், சொற்களின் சுத்தமும் காணப்பட்டன.
மணி ஐயர், அரியக்குடி, சித்தூர் சுப்பிரமணியபிள்ளை, ஜி.என்.பி, டைகர் வரதாச்சாரியார், மஹாராஜபுரம் விஸ்வநாதையர், டி. கே. பட்டம்மாள் போன்ற பிரபல பாடகர்களுக்கு வாசித்து வந்தார்.

மணி ஐயர், 1940 ம் ஆண்டு திருவாங்கூர் சமஸ்தானத்தால் “நாதமணி” என்ற பட்டம் அளித்து கௌரவிக்கப்பட்டார். அதே ஆண்டு அமெரிக்காவில் நடைபெற்ற எடின்பரோ கலை விழாவிலே கலந்து மிருதங்கத்தின் பெருமையினை மேல்நாட்டினர் நன்கு புரியும்படி செய்தார். 1965 ம் ஆண்டு இந்திய ஜனாதிபதியின் விருதும் பெற்றார்.

இவர் தமிழ் நாட்டு மிருதங்கக் கலைஞர்களுக்கு சிகரம் போல் திகழ்ந்தவர். இவரை நந்திதேவரின் அவதாரம் எனலாம். பலரது பாராட்டுகளையும், நன்மதிப்பையும் பெற்ற இவர் 1982 ஆம் ஆண்டு இசையுலகை விட்டு மறைந்தார்.